ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேட்டரிங்

# THE COVAI MAIL

8 ANNIVERSARY

Sree Annapoorna Sree Gowrishankar
The pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 8 Issue No. : 39 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Dec 26, 2021-Jan 1, 2022, 4 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-



# அமைச்சரவையில் உதயமாவாரா உதயநிதி?

சாணக்கியன்
தி கோவை மெயில்

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் மகனும், திமுக மாநில இளைஞரணி செயலாளருமான உதயநிதிக்கு, அமைச்சர் பதவி கொடுக்க வேண்டும் என மூத்த அமைச்சர்கள், கட்சி நிர்வாகிகள் தொடர்ந்து குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றனர். இந்நிலையில், அமைச்சரவையில் உதயநிதிக்கு இடம் கிடைக்குமா, இல்லையா என்ற விவாதம் அரசியல் அரங்கில் எழுந்துள்ளது.

1972 ஆம் ஆண்டில் எம்ஜிஆர், திமுகவை விட்டு விலகி அதிமுகவை உருவாக்கியப் பின்னர் மிஞ்சிய திமுக மு.கருணாநிதியின் முழுக் கட்டுப்பாட்டுக்கு வந்தது. இதன் பிறகு திமுக ஆட்சி இல்லாமல் இருந்த காலகட்டத்தில் கூட ஸ்டாலினை உருவாக்கும் வேலையை கருணாநிதி செய்துவந்தார். 1975 ஆம் ஆண்டிலேயே மிசா போராட்டத்தில் சிறை சென்றார் ஸ்டாலின். இதன் பிறகு தீவிர அரசியலில் ஸ்டாலினை, கருணாநிதி களம் இறக்கினார்.

அதன் முதல்படியாக, 1982 இல் ஸ்டாலினுக்கு இளைஞரணி செயலாளர் பதவியைக் கொடுத்து அழகு பார்த்தார் கருணாநிதி. இதே காலகட்டத்தில், ஸ்டாலினுக்கு கட்சியில் சக போட்டியாளர்கள் இருந்தனர். இதற்கு முக்கிய காரணம், அந்த காலகட்டத்தில் பல்முனை திறமைமிக்க டி.ராஜேந்தர், திமுகவில் கருணாநிதிக்கு அடுத்தப்படியாக தொண்டர்களால் விரும்பப்படும் முக்கிய நிர்வாகியாக இருந்தார். என்னில் பாதி என் தம்பி என கருணாநிதியின் வாயாலேயே டி.ராஜேந்தர் புகழாரம் சூட்டப்பட்டார்.

1984 இல் பொதுத்தேர்தலுக்கு முன்பு நடந்த மயிலாடுதுறை பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் நடைபெற்ற போது திமுக வேட்பாளராக சத்தியசீலன் களம் இறக்கப்பட்டார். அதிமுக சார்பில் தம்பிபால வேலாயுதம் களம் இறக்கப்பட்டார். அப்போது மயிலாடுதுறையில் டி.ராஜேந்தர் பேசும்போது, இது எனக்கும், எம்ஜிஆருக்கும் இடையிலான போட்டி, இதில் எம்ஜிஆரை தோற்கடிப்பேன் எனப் பேசினார். அவரது வாக்கு பலித்தது போலவே திமுக வேட்பாளர் சத்தியசீலன் வெற்றிபெற்றது எம்ஜிஆருக்கே அதிர்ச்சியைக் கொடுத்தது.

இந்த காலகட்டத்தில் ஸ்டாலினும் தீவிர அரசியல் களத்தில் தான் இருந்தார். அக்கால கட்டத்தில் டி.ராஜேந்தரக்கு எதிராக ஸ்டாலினை, வைகோ ஆதரித்துக் கொண்டிருந்தார்.

1984 பேரவைத் தேர்தலில் ஆயிரம்விளக்கு தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்த ஸ்டாலின், மீண்டும் அதே தொகுதியில் 1989 இல் வெற்றிபெற்றார். 13 ஆண்டுகளுக்குப் பிறகு திமுக ஆட்சியைப் பிடித்த நிலையில், ஸ்டாலினுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவில்லை. இந்தப் பேரவைத் தேர்தலுக்கு முன்பாகவே டி.ராஜேந்தர் திமுகவில் இருந்து விலகிவிட்டார். அதேநேரத்தில், ஸ்டாலினை தீவிரமாக ஆதரித்து வந்த வைகோ, ஈழப்பயணம் மேற்கொண்டார். அதன் பிறகு கட்சித் தொண்டர்களுக்கு வைகோ மீதான அபிமானம் உயர்ந்தது. அவருக்கென மாநிலம் முழுவதும் வெறிப்பிடித்த தொண்டர்கள் திரளத் தொடங்கினர். அப்போது கருணாநிதியின் வாரிசு வைகோ தான் என்ற பேச்சும் அரசியல் அரங்கில் உலா வந்தது.

இதற்கிடையே, 1991 பேரவைத் தேர்தலில் திமுக தோல்வி அடைந்தது. ஸ்டாலினும் ஆயிரம்விளக்குத் தொகுதியில் தோல்வி அடைந்தார். இதன் பிறகு 1993 இல் கருணாநிதியை கொல்ல வைகோ சதி செய்கிறார் என முன்னாள் மத்திய அமைச்சர் சுப்பிரமணிய சுவாமி கொளுத்திபோட்டதில் வைகோ திமுகவில் இருந்தே வெளியேற்றப்படும் சூழல் உருவானது. அதற்கு முக்கிய காரணம் ஸ்டாலினுக்கும், வைகோவுக்கும் இடையே இருந்த அரசியல் போட்டி. ஒரு கட்டத்தில் கருணாநிதி, வைகோ இடையிலான போட்டியாக மாறியது. அதன் காரணமாகவே திமுகவில் இருந்து வைகோவை வெளியேற்றினார் கருணாநிதி.

வைகோவுடன் 13 மாவட்டச் செயலர்கள், எண்ணில் அடங்காத ஒன்றியச் செயலர்கள் வெளியேறினர். திமுகவே நேர்செங்குத்தாக பிளவுப்பட்டதாக விமர்சனம் எழுந்தது. இதன் காரணம், இவர்கள் அனைவருமே, திமுக தலைவர் கருணாநிதியின் நல்லெண்ணத்தை பெறாதவர்களாகவும், அவரால் ஏதாவது ஒரு வகையில் பாதிக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். உதாரணமாக கன்னியாக்குமரியில் இருந்து முக்கிய நிர்வாகி ரத்தினராஜ் வைகோவுடன் சென்றார். இதற்கு காரணம், ரத்தினராஜுக்கு போட்டியாக தர்மராஜ் என்பவரை கருணாநிதி உருவாக்கிக் கொண்டிருந்தார்.

இதேபோல, பல்வேறு நிகழ்வுகளில் பாதிக்கப்பட்டவர்கள் வைகோவுடன் சென்றனர். அதன்பிறகு 1996 பேரவைத் தேர்தலில் திமுக, தமாகா கூட்டணி உருவானதாலும், ஜெயலலிதா எதிர்ப்பு ஒரே முகமாக திமுக கூட்டணியை நோக்கி திரண்டதாலும் வைகோவால் ஜொலிக்க முடியவில்லை. இதன் விளைவு திமுகவில் ஸ்டாலினுக்கு போட்டியே இல்லை என்ற சூழல் உருவானது. 1996 க்கு பிறகு ஸ்டாலினுக்கு அரசியலில் தொடர்ந்து ஏறுமுகம் உருவானது. பல ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருந்த உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டு, நேரடித் தேர்தலில் சென்னை மேயராக ஸ்டாலின் முதல் முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வாய்ப்பை கருணாநிதி உருவாக்கி கொடுத்தார்.

1996 பேரவைத் தேர்தலுக்கு முன்பாகவே நாட்டாமை திரைப்பட விவகாரத்தில் ஜெயலலிதாவுடன் ஏற்பட்ட அரசியல் மோதலில் சரத்குமார் திமுகவில் இணைந்தார். சரத்குமாருக்கும் அரசியலில் ஏறுமுகம் கிட்டியது. அக்காலகட்டத்தில் சரத்குமாருக்கும் நல்ல பட வாய்ப்புகள் கிட்டியதால் பலமொழிகளை சரளமாக பேசக்கூடிய சரத்குமாரும், ஸ்டாலினுக்கு போட்டியாக திமுகவில் உருவாகக்கூடும் என்ற பேச்சும் எழுந்தது.

இதற்கிடையே 1998 மக்களவைத் தேர்தலில் திருநெல்வேலி மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பு சரத்குமாருக்கு கிட்டியபோது வெற்றிக்கனியை பறிக்க முடியவில்லை. கோவை குண்டுவெடிப்பு, பிரதமர் வேட்பாளரான வாஜ்பாயிக்கு ஆதரவான அலை வீசியதாலும், நுட்பமான கள அரசியலை புரிந்துகொள்ளாமல் இருந்ததாலும் சரத்குமார் தோல்வி அடைந்தார். இதன் பின்பும் சரத்குமாருக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவி கிடைத்தது. இருப்பினும் இந்த தோல்விக்குப் பிறகு சரத்குமாருக்கு பெரிய அளவில் ஏறுமுகம் கிடைக்கவில்லை.

2003 ஆம் ஆண்டில் கட்சியில் ஸ்டாலின் துணைப் பொதுச்செயலர் பதவியை அடைந்தார். 2006 இல் பேரவைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கவில்லை எனக்கூறி திமுகவில் இருந்து விலகி, அதிமுகவில் சரத்குமார் இணைந்ததால், ஸ்டாலினுக்கு இருந்த சிறு போட்டியும் நீங்கியது. அதன் பிறகு சரத்குமாரின் அரசியல் வாழ்வும் அஸ்தமனமானது. 2006 பேரவைத் தேர்தலுக்குப்பின் ஸ்டாலினும் அமைச்சர் ஆனார்.

### அதிகார மையமாக மாறிய ஸ்டாலின்!

இதன்பிறகு யாரும் எதிர்பாராத நிலையில், திமுக தலைவர் கருணாநிதி, அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்த தனது மூத்த மகன் மு.க.அழகிரியை அரசியலில் அறிமுகம் செய்தார். முன்னாள் அமைச்சர் தா.கிருட்டிணன் கொலையில் விடுதலையான பிறகு 2009 மக்களவைத் தேர்தலில் மதுரை தொகுதியில் வெற்றிபெற்று மத்திய உரம் மற்றும் ரசாயனத்துறை அமைச்சராக பதவியேற்றார். குறிப்பாக தென்மாவட்டங்களில் உள்ள 10 மக்களவைத் தொகுதிகளில் 9 தொகுதிகளில் திமுக கூட்டணி வெற்றிபெற முக்கிய களப்பணியாற்றினார்.

இதன் பிறகு நீண்ட காலத்துக்கு பிறகு கன்னியாக்குமரி மக்களவைத் தொகுதியில் திமுக வேட்பாளர் ஹெலன் டேவிட்சனை வெற்றிபெற செய்தார். இதற்கு பரிசாக தென்மண்டல அமைப்புச் செயலாளர் பதவியை அழகிரிக்கு கொடுத்து அலங்கரித்தார் கருணாநிதி. இதேவேளையில் மு.க.ஸ்டாலினுக்கு பொருளாளர் பதவியைக் கொடுத்து கட்சியில் அன்பழகனுக்கு அடுத்து மூன்றாவது அதிகார மையமாக மாற்றினார் கருணாநிதி. மேலும், கருணாநிதி குடும்பத்தில் இருந்து மற்றொரு வாரிசாக கனிமொழியும் அரசியல் களத்தில் இறக்கப்பட்டதால் ஸ்டாலினுக்கு, அழகிரி, கனிமொழி என இரு போட்டியாளர்கள் குடும்பத்தில் இருந்தே உருவாகினர்.

குடும்ப அரசியல் சுழலில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த திமுக, 2011 இல் நடந்த பேரவைத் தேர்தலில் திமுக ஆட்சியை இழந்தது. அந்த தேர்தலில் ஆயிரம்விளக்கு தொகுதியில் இருந்து கொளத்தூர் தொகுதிக்கு மாறிய ஸ்டாலின், அதிமுக வேட்பாளர் சைதை துரைசாமியிடம் 2,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதால் தனது அரசியல் வாழ்வை நிலைநிறுத்திக் கொண்டார்.

பின்னர் 2013 ஆம் ஆண்டில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் இருந்து திமுக விலகுவதில் அழகிரிக்கு மாறுபட்ட கருத்து இருந்தது. தென்மாவட்டங்கள் முழுவதும் அழகிரிக்கு என தனி ஆதரவு வளையம் உருவானது. இதன் தொடர்ச்சியாக கொங்கு மண்டலத்தில் கூட ஆங்காங்கே அழகிரியின் ஆதரவு வளையம் உருவாக தொடங்கியது. குறிப்பாக முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் கே.பி.ராமலிங்கம், முன்னாள் இணை அமைச்சர் நெப்போலியன், முன்னாள் ராமநாதபுரம் எம்பி. ஜே.கே.ரித்தீஷ் போன்ற ஆதரவாளர்கள் அழகிரிக்கு உருவாகினர்.

அழகிரிக்கும் ஸ்டாலினுக்கும் இடையிலான போட்டி ஒரு கட்டத்தில் கருணாநிதி, அழகிரி போட்டியாக மாறவே அழகிரியை கட்சியில் ஓரங்கட்டும் பணியைத் தொடங்கினார் கருணாநிதி. மதுரை மாநகர திமுக அமைப்பை கலைப்பது என்ற போர்வையில் அழகிரி ஆதரவாளர்களை கட்சியில் இருந்து நீக்கினார். இதன் தொடர்ச்சியாக அழகிரியும் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். இதனால் கட்சியில் ஸ்டாலின் கை ஓங்கியது.

தொடர்ந்து 2014 மக்களவைத் தேர்தலை பொறுப்பேற்று நடத்தி, ஸ்டாலின் தோல்வி அடைந்தாலும், 2016 பேரவைத் தேர்தலில் திமுக வலுவான எதிர்கட்சியாக வரும் வாய்ப்பை உருவாக்கினார். இதனால் ஸ்டாலின் கட்டுப்பாட்டில் திமுக முழுமையாக வந்தது.

இதற்கிடையே கருணாநிதி தீவிரமாக செயல்படாமல் இருந்த காலகட்டத்தில் கட்சியின் பொதுச்செயலர் க.அன்பழகனின் ஆசியுடன் கட்சியில் செயல் தலைவராகவும், கருணாநிதி மறைவுக்குப்பின் தலைவராகவும் பொறுப்பேற்றார் ஸ்டாலின். கட்சியில் ஒற்றைத் தலைமையாக நிமிர்ந்த ஸ்டாலின், 2019 மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற்று தனது திறமையை நிரூபித்தார். தொடர்ந்து 2021 பேரவைத் தேர்தலில் வெற்றிபெற்று முதல் முறையாக முதல்வராக பதவியேற்று திமுகவிலும், தமிழக அரசியலிலும் தனிப்பெரும் சக்தியாக உருவெடுத்துள்ளார் ஸ்டாலின்.

இதற்கிடையே 2018 ஆம் ஆண்டில் நடந்த காவிரி பிரச்சனை போராட்டத்தில் அரசியல் களத்துக்கு வந்த உதயநிதி, 2019 மக்களவைத் தேர்தலில் திமுகவின் நட்சத்திரப் பேச்சாளராக அனைத்து தொகுதிகளிலும் வலம் வந்தார். குறிப்பாக அன்புமணி ராமதாஸ், பிரதமர் மோடி, அப்போதைய முத்லவர் எடப்பாடி கே.பழனிசாமி உள்ளிட்டோரை கடுமையாக தாக்கி பிரசாரம் மேற்கொண்டார்.

**இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின்படி, தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளில் 15 சதவீதம் பேர் மட்டுமே அமைச்சர்களாக இருக்க முடியும். அதன்படி, தமிழகத்தில் 234 பேரவை உறுப்பினர்களில் 34 பேர் மட்டுமே அமைச்சர்களாக முடியும். ஏற்கெனவே 34 அமைச்சர்கள் பதவியில் இருப்பதால் உதயநிதியை அமைச்சர் ஆக்குவதிலும் சிக்கல் உள்ளது.**

திமுக மாபெரும் வெற்றி அடைந்த பிறகு கட்சியின் இளைஞரணி செயலராக உதயநிதி பொறுப்பேற்றார். தொடர்ந்து 2021 பேரவைத் தேர்தலில் சேப்பாக்கம் திருவில்லிக்கேணி தொகுதியில் போட்டியிட்டு பெரிய வெற்றியை பெற்றார். இருப்பினும் அமைச்சரவையில் உதயநிதிக்கு, இடம் அளிக்கப்படவில்லை.

ஆனால், கட்சியில் ஸ்டாலினுக்கு அடுத்தப்படியாக கட்சி நிர்வாகிகள், உதயநிதி ஸ்டாலினுக்கும் மரியாதை கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வீட்டுவசதி துறை அமைச்சர் சு.முத்துசாமி, அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு உள்ளிட்ட முக்கியப் புள்ளிகள், உதயநிதிக்கு அமைச்சர் பதவி வழங்க வேண்டும் என குரல் கொடுத்து வருகின்றனர்.

ஆனால், முடிவெடுக்கும் இடத்தில் இருக்கும் ஸ்டாலின் என்ன முடிவை எடுக்கப்போகிறார் என்பது இதுவரை தெரியவில்லை. காரணம், இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின்படி, தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளில் 15 சதவீதம் பேர் மட்டுமே அமைச்சர்களாக இருக்க முடியும். அதன்படி, தமிழகத்தில் 234 பேரவை உறுப்பினர்களில் 34 பேர் மட்டுமே அமைச்சர்களாக முடியும். ஏற்கெனவே 34 அமைச்சர்கள் பதவியில் இருப்பதால் உதயநிதியை அமைச்சர் ஆக்குவதிலும் சிக்கல் உள்ளது.

திமுகவுக்குள் ஸ்டாலின் நிலை பெற்றதைவிட, மிக மிக எளிதாக உதயநிதி ஸ்டாலின் நிலைபெற்று வருகிறார். இதற்கு காரணம், கருணாநிதி காலத்தில் அனைத்து மாவட்டச் செயலர்களுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், ஸ்டாலின் காலத்தில் ஜெயலலிதா போல தலைமையின் அதிகாரம் அதிகரித்துள்ளதால், உதயநிதிக்கான வளர்ச்சி எளிதாக உள்ளது. அதேவேளை ஸ்டாலினுக்கு டி.ராஜேந்தர், வைகோ, சரத்குமார், மு.க.அழகிரி, கடைசி காலகட்டத்தில் வீரபாண்டி ஆறுமுகம் என போட்டி இருந்தது போல உதயநிதிக்கு போட்டியே இல்லை என்ற நிலை தான் உள்ளது.

அதேபோல எம்ஜிஆர் மற்றும் கருணாநிதி, ஜெயலலிதா மற்றும் கருணாநிதி என இரு துருவ அரசியல் இருந்தது போல இப்போது ஸ்டாலினுக்கு இணையான ஒற்றைத் தலைமை இல்லாத காரணத்தால் கருணாநிதி தயங்கி, தயங்கி செய்ததை ஸ்டாலின் தயக்கமே இல்லாமல் செய்ய முடியும்.

உதயநிதிக்கு அமைச்சர் பதவி என்ற குரல்களுக்கு என்ன பதில் அளிக்கப் போகிறார் ஸ்டாலின் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

### உதயநிதியின் அரசியல் வாழ்வு

இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது, வாரிசுகளை தலைவர்கள் அரசியலில் அறிமுகப்படுத்தினாலும் ஜனநாயகத்தில் மக்கள் அங்கீகரித்தால் மட்டுமே யாரும் தலைவர்களாக மிளிர முடியும். ராகுல் காந்தியை என்னதான் காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொண்டாலும் மக்கள் அபிமானத்தை பெறுவதற்காக போராடிக் கொண்டிருக்கிறார் ராகுல் காந்தி.

தற்போதைய நிலையில் இந்தியாவில் பெரும்பாலான கட்சிகள் தலைமையின் பிடிக்குள் இருக்கும்போது எந்த வாரிசையும் எளிதாக முன்னிறுத்த முடியும். உதயநிதி ஸ்டாலினைப் பொறுத்தவரை அவருக்கு கட்சிக்குள் போட்டியே இல்லை. திமுக ஆட்சிக்காலத்தில் எவ்வாறாக செயல்படுகிறார் உதயநிதி ஸ்டாலின் என்பதைப் பொறுத்தே அவரின் அரசியல் வாழ்வும் உள்ளது. சேப்பாக்கத்தில் போட்டியிட்டு பெரிய வெற்றியைப் பெற்றதன் மூலம் மக்கள் சக்தியாக உருவெடுத்துள்ளார் உதயநிதி ஸ்டாலின்.

## உலகத் தமிழ்ப் பண்பாட்டு மைய 8ஆம் ஆண்டு விழா

# சமூகத்தின் அடையாளம் மொழியே - நல்ல பழனிசாமி



நிகழ்வில் விருதினைப் பெற்றுக் கொண்டவர்களுடன் எடுக்கப்பட்ட குழு புகைப்படம். உடன், உலக தமிழ்ப் பண்பாட்டு மையத் தலைவர் நல்ல பழனிசாமி, அறங்காவலர் தவமணி தேவி பழனிசாமி மற்றும் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் மேனாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை.

தி கோவை மெயில்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் எட்டாம் ஆண்டு விழா டாக்டர் என்.ஜி.பி. கலை, அறிவியல் கல்லூரி வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நூல் வெளியீடு மற்றும் விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

கல்லூரியின் செயலரும், உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் அறங்காவலருமான தவமணி தேவி பழனிசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்

தாய் சேய்க்கான சத்தான உணவுகள், இளைஞர்களுக்கான வாழ்க்கைத் திறன் ஆகிய நூல்களையும், தமிழோசை என்ற மாணவர் இதழையும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் தலைவர் நல்ல பழனிசாமி வெளியிட்டார்.

மருத்துவர் இராஜேந்திரன் எழுதிய தாய்சேய்க்கான சத்தான உணவுகள் நூலை மருத்துவர் சதாசிவமும், முனைவர் முத்துசாமி இளைஞர்களுக்கான வாழ்க்கைத் திறன்கள் நூலையும், இயகாகோ என்.சுப்ரமணியம் தமிழோசை மாணவர் இதழையும் பெற்றுக் கொண்டனர்.

பேராசிரியர் சிற்பி பால சுப்பிரமணியம் விருது பெறுபவர்களை அறிமுகம் செய்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் மேனாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான விருதுகளை வழங்கினார்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம் 2021 ஆம் ஆண்டுக்கான உ.வே.சா. தமிழறிஞர் விருதினை முனைவர் சுந்தர மூர்த்தி, பெரியசாமித் தூரன் தமிழ்ப் படைப்பாளர் விருதை பாலமுருகன், டாக்டர் நல்ல பழனிசாமி பிறதுறைத் தமிழ்த் தொண்டர் விருதினை முனைவர் பாலுசாமி பெற்றுக் கொண்டனர். இவர்களுக்கு பாராட்டுப் பத்திரமும் ரூ.1 லட்சத்திற்கான காசோலையும் வழங்கப்பட்டது.

மேலும், அருளி, சூர்யகாந்தன், தமிழ்மகன் ஆகியோருக்கு சிறப்பு விருதுகளும், பாராட்டுப் பத்திரமும், ரூ.50,000 க்கான காசோலையும் வழங்கப்பட்டு சிறப்பு செய்யப்பட்டது.



### கலாச்சாரத்தை மறக்கக் கூடாது!

உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம் மற்றும் கே.எம்.சி.ஹெச் - ன் தலைவருமான நல்ல பழனிசாமி பேசுகையில்: உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம் தொடங்கி எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டது. ஒரு சமூகத்தின் அடையாளமே மொழி தான் என்றும் நாம் பேசுகின்ற பேச்சுதான் சமுதாயத்தின் பெருமை எனக் கூறினார். நம் கலாச்சாரம், இலக்கியம், மொழியை இன்றைய இளைஞர்கள் மறந்து விடக்கூடாது. இதை உணர்த்தும் நோக்கிலே உலகத் தமிழ் பண்பாட்டு மையம் தொடங்கப்பட்டது.

நமது நாகரிகமும், கலாச்சாரமும் சிதைந்து விடாமல் இருக்க தமிழ்ப் பெயர்களை இறுதிப் பெயராக வைக்க வேண்டும் எனப் பேசினார்.

### காலத்தின் உணர்வே கவிதைகள்!

இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் மேனாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை கூறுகையில்: படைப்புகளையும், படைப்பாளிகளையும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம் ஊக்குவிக்கிறது. கொங்கு மண் தமிழ் மண்ணுக்காக நிறைய செய்து கொண்டிருக்கிறது. தமிழ் எழுத்துகளுக்குப் பரிசு கொடுக்கப் படுகிறது. அதோடு தமிழையும் அனைவரும் படிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். மேலும், “சிந்திக்காமல் படிப்பது வீண் என்றும், படிக்காமல் சிந்திப்பது ஆபத்து” என்றும் கூறினார். எழுத்தாளர்கள் நிமிர்ந்து, நேர்பட பார்ப்பதோடு, நெஞ்சில் படுவதை வளம்பட சொல்ல வேண்டும் என்றார்.

காலத்தின் உணர்வுகளை பிரதிபலிப்பதாக கவிதைகள் இருக்க வேண்டும் எனவும் கவிஞன் சாதாரண மனிதர்களை விட வேறுபட்டவனாக இருக்க வேண்டும் எனவும் கூறினார். மேலும், தமிழ் மொழி அதிகமான இலக்கியங்களை கொடுத்துள்ளது. நல்ல நூல்களைத் தேடிப் படிக்க வேண்டும் என்பதையும் மாணவர்களுக்கு அறிவுறுத்தினார். தமிழ் எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள். ஆனால், அந்த எழுத்துகளைப் படிப்பவர்கள் இருக்கிறார்களா என்பது தான் இன்றைய சூழ்நிலையாக உள்ளது எனக் கூறினார்.




# முருகன் - அழகன் - ஆறுமுகன்... ஒரு விசித்திர உயிர்!

தி கோவை மெயில்

**தன் 8 வயதில், அவன் அசாத்தியமான சக்தியுடன், கற்பனைக்கு எட்டாத தனித் திறமைகளுடன் விளங்கினான். வீழ்த்த முடியாத போர் வீரனாகவும் திகழ்ந்தான். அவன் இருந்த விதம் ஒரு போராளியைப் போன்று இருந்தது. எங்கெல்லாம் அக்கிரமங்கள் நிகழ்ந்தனவோ அங்கெல்லாம் கார்த்திகேயன் இருந்தான்.**

சத்குரு: தமிழ்நாட்டில் நாம் முருகனென வழிபடும் சுப்ரமணியனது கதை சற்றே சுவாரஸ்யமானது. சிவனை யக்ஷ ஸ்வரூபன் என்று அழைக்கிறோம். அவன் இவ்வுலகத்தைச் சேர்ந்தவன் அல்ல. அவன் குறிப்பிட்ட விதமான சில சடங்குகளைச் செய்து வந்ததால், அவனுக்கு சில குணங்களுள்ள மனைவி தேவைப்பட்டாள். அவனுக்கு மனித மனைவி கிடைத்தாலும் அவனது விந்தை ஏந்திக் கொண்டு குழந்தையை ஈன்று தரும் ஒரு துணைவி அவனுக்கு அமையவில்லை. பார்வதியால், சிவனின் விந்தை தனக்குள் ஏந்திக் கொள்ள முடியாததால், 6 யக்ஷ குலப் பெண்களை அழைத்து வந்தனர். அவனுடைய விந்து அவர்களுடன் பகிரப்பட்டது. அவர்களாலும் சிவனின் விந்தை தாங்கிக் கொள்ள முடியவில்லை, அதனால் அது புனிதமான வேள்வியில் விடப்பட்டது.

சிவனின் வாரிசைக் காணத் துடித்துக் கொண்டிருந்த பார்வதி, இதைப் பார்த்ததும் பேரார்வம் கொண்டாள். யக்ஷ குலப் பெண்களும் அந்தக் கருவை வெகுநாட்களுக்கு சுமக்கவில்லை. வெறும் 38, 40 நாள் கரு என்றே இதனைச் சொல்கிறார்கள். இந்தக் கருக்களை ஒன்று சேர்த்து, அவற்றை தாமரை இலையில் வைத்து, ஊட்டமளித்து வளர்த்தாள் பார்வதி. ஆறு குழந்தைகளும் தாமரை இலையில் வளர்ந்தன. ஒவ்வொன்றும் பிரமிப்பான குணங்களை கொண்டவையாய் இருந்தன. ஆனால், 6 உயிர்களுக்குமே தனியுடல் எடுப்பதற்கு தேவையான உடலமைப்பு இல்லை. ஒரு உயிர், இந்த ஆறு குணங்களையும் ஒருங்கே பெற்றால் அது அற்புதமான ஒரு உயிராக இருக்கும் என்பதைப் பார்த்தாள் பார்வதி. உடல் குறைபாடோடு உள்ள இந்த உயிர்களை தன்னுடைய தாந்திரீக சக்தியால் ஒன்று சேர்ப்பதில் வெற்றி கண்டு, அவற்றை ஒரே குழந்தையாய் மாற்றினாள்.



இதனால் கார்த்திகேயன் ஆறுமுகன் ஆனான். அவனுடைய குணமும் ஆறுமுகமானது. ஆறு உயிர்களை ஓர் உடலிற்குள் அடைக்கும் ஒரு முயற்சி இது. பல தருணங்களில் இதுபோன்ற முயற்சிகள் நடைபெற்றிருந்தாலும் அவை யாவும் தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன. இங்கு ஈஷாவிலும் நாம் 2 உயிர்களை ஒரு உடலிற்குள், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வைத்திருந்திருக்கிறோம். ஆனால், 6 உயிர் ஒருடலினுள் இருந்தது அரிதினும் அரிதான ஒரு நிகழ்வு. இதுபோன்ற ஒரு நிகழ்வைப் பற்றி நாம் கேள்விப்பட்டதே இல்லை. பார்வதியின் அரும்முயற்சியால் 6 உயிர்கள் ஒருடலாய் வளர்ந்தன. அவன்தான் கார்த்திகேயன்.

தன் 8 வயதில், அவன் அசாத்தியமான சக்தியுடன், கற்பனைக்கு எட்டாத தனித் திறமைகளுடன் விளங்கினான். வீழ்த்த முடியாத போர் வீரனாகவும் திகழ்ந்தான். அவன் இருந்த விதம் ஒரு போராளியைப் போன்று இருந்தது. எங்கெல்லாம் அக்கிரமங்கள் நிகழ்ந்தனவோ அங்கெல்லாம் கார்த்திகேயன் இருந்தான். அதனை ஒரு முடிவிற்கு கொண்டு வந்தான்.

தேசம் முழுவதும் அக்கிரமங்களைத் தேடித் திரிந்தான் கார்த்திகேயன். அக்கிரமத்தைப் பார்த்த இடங்களிலெல்லாம் வெட்டிச் சாய்த்தான். தற்போது கர்நாடக மாநிலத்திலுள்ள காட்டி சுப்ரமண்யா என்னும் இடத்திற்கு வந்தபோது, அங்கிருந்த நதியில் தன் வாளை கடைசி முறையாக கழுவினான். அங்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இருந்து தியானம் செய்தபின், மலைமேல் ஏறி, அதன் உச்சியில் ‘நின்ற’ நிலையில் தன் உடலை விட்டான். இன்றும் இம்மலை குமாரபர்வதம் என்று அவன் பெயரால் அழைக்கப்படுகிறது. பொதுவாக, யோகிகள் உடலை விடும்போது, ஒன்று அமர்ந்து கொண்டோ அல்லது படுத்துக்கொண்டோ உடல் விடுவது வழக்கம். ஆனால், இந்தத் தீவிர யோகி நின்று கொண்டே தன் உடலை நீத்தான்.

அவன் உடல்விட்ட அந்த இடம் சக்திப் பிரவாகமாய் திகழ்கிறது. சக்தி அதிர்வுகளுடன் விளங்குகிறது. இதில் நம்ப முடியாத ஒரு விஷயம் என்னவென்றால், அந்த மலை உச்சிக்கு போய், அங்கிருக்கும் சில கற்களைப் புரட்டிப் பார்த்தால், அவை யாவும் ஆறு முகங்களை செதுக்கி வைத்ததைப்போல் இருக்கின்றன. குமாரபர்வத மலை உச்சிக்கு செல்வதே கடினம், அதுபோன்ற ஓரிடத்தில் எங்கேயோ லேசாகத் தோண்டினால் ஒரு ஆறுமுக கல் கிடைக்கிறது. இதனை சண்முக லிங்கம் என்கிறார்கள். இந்த கற்கள் மிக மிக சக்தி வாய்ந்தவைகளாக உள்ளன.

இந்த கற்கள், இந்த வடிவம் பெற்றமைக்குக் காரணம், அவன் விட்டுச் சென்ற அந்த சக்தி சூழ்நிலை. அவனது ஆறுமுக சக்தி, அங்கிருக்கும் கற்களையும் விட்டு வைக்கவில்லை. அந்த இடத்தில் எதுவுமே அவனது சக்தி நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ள இயலாத வகையில் இருக்கிறது. சுப்ரமணியன் ஒரு பேரற்புதம், ஆனால் அவன் குறிப்பிட்ட ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்து, அதன்படி வாழ்ந்தான். தனக்கு 21 வயது இருக்கும்போதே அவன் தன் உடலை நீத்தான். பெரும்பாலான பால யோகிகளின் நிலை இப்படித்தான். மிகச் சிறிய வயதிலேயே அவர்கள் தங்கள் உடலை விட்டுச் சென்று விடுவர்.

தமிழில், சுப்ரமணியனுக்கு முருகன் என்ற பெயருள்ளது எத்தனை பொருத்தமான ஒரு விஷயம்! முருகன் என்றால் அழகு என்று கேள்விப்பட்டேன். அவன் அத்தனை அற்புதமான ஒரு உயிராக வாழ்ந்தான். அந்த அழகு, அவனிருந்த அத்தனை இடத்திலும் பிரதிபலித்தது.

## ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரியில்

# தேசிய ஒருமைப்பாட்டு முகாம் நிறைவு

தி கோவை மெயில்

சென்னை மண்டல நாட்டு நலப்பணித்திட்ட இயக்குநரகம், பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகியவை இணைந்து நடத்திய, ‘நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களுக்கான 7 நாள் தேசிய ஒருமைப்பாட்டு முகாம்’ சமீபத்தில் நிறைவு பெற்றது.

நிறைவு விழாவிற்கு எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாராணயசுவாமி தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் சிவக்குமார் வரவேற்றார்.

கோவை மாநகரக் காவல் ஆணையர் பிரதீப்குமார் ஐ.பி.எஸ். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசியதாவது: இம்முகாமில் 12 மாநிலங்களைச் சேர்ந்த நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் பங்கேற்றது பாராட்டத்தக்கது.

நாட்டு நலப்பணித்திட்ட அமைப்பானது பல்வேறு சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாலும், சாலை பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனப் பேசினார்.

சென்னை நாட்டு நலப்பணித்திட்ட இயக்குநரக மண்டல இயக்குநர் சாமுவேல் செல்லையா பேசும்போது, நாட்டு நலப்பணித்திட்டத்தின் இலக்கே சமுதாயப் பொறுப்பை அடிப்படையாகக் கொண்டதுதான்.

இம்முகாம் தன்னார்வச் சேவையை இளம் மனதில் விதைத்துள்ளது. யோகாசனம், உடற்பயிற்சி, பெண்கள் மேம்பாடு, குழு விவாதங்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் என ஒற்றுமையைப் போற்றும் பலவித நிகழ்ச்சிகள் இம்முகாமில் இடம் பெற்றன என்றார்.

தேசிய ஒருமைப்பாட்டு முகாமைச் சிறப்பாக நடத்தியதற்காக, எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலருக்கு, சென்னை நாட்டு நலப்பணித்திட்ட இயக்குநரக மண்டல இயக்குநர் பாராட்டுச் சான்று வழங்கினார்.

விழாவில் பாரதியார் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப் பாளர் அண்ணாதுரை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் பிரகதீஸ்வரன், நாகராஜன், சுபாஷினி, தீபக்குமார், கீர்த்திவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# புரிந்துணர்வு ஒப்பந்தம்



டாக்டர் என்.ஜி.பி. தொழில் நுட்பக் கல்லூரியின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை, பைன்ஸ்பியர் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தோடு சமீபத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது. கல்லூரியின் செயலாளர் தவமணி பழனிசாமி மற்றும் பைன்ஸ்பியரின் இணை நிறுவனர் வசந்த் நாகராஜ் ஆகியோரால் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

# நிறைவேற்றுவாரா செந்தில் பாலாஜி?

**ஆசிரியர்**
**தி கோவை மெயில்**

எந்த ஒரு ஊருக்கும் போக்குவரத்து வசதி என்பது மிகவும் முக்கியமான தேவைகளில் ஒன்றாகும். அதுவும் கோவை போன்ற தொழில் சார்ந்த பகுதிகளில் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகவே சாலை வசதி இருக்கிறது. ஆனால் உட்கட்டமைப்பு வசதிகளில் மிக முக்கியமான இந்த சாலை வசதி என்பது கோவையைப் பொறுத்தவரை போதாது என்ற நிலையில் இருப்பதே நடைமுறை உண்மையாகும்.

கடந்த சில ஆண்டுகளாக கோவையில் திரும்பிய பக்கமெல்லாம் பாலங்கள், சாலைகள் என்று பல பணிகள் தொடங்கப்பட்டு இருந்தாலும் பெரிய அளவில் முழுமை பெற்றன என்று சொல்ல முடியவில்லை. இந்த நிலையில் தான் தமிழகத்தில் மாநில அரசுக்கான தேர்தல் நடைபெற்று ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆனால் ஆளும்கட்சி திமுகவுக்கு இங்கு ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூட தேர்வாகவில்லை. இப்பகுதி மக்களின் குறைகளை மக்கள் மன்றத்தில் எடுத்துச் சொல்லக்கூடிய ஆளும் கட்சி உறுப்பினர்களும் அமைச்சர்களும் யாரும் இல்லாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில்தான் அமைச்சர் செந்தில் பாலாஜி இப்பகுதியில் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அமைச்சர் செந்தில் பாலாஜி செயல் வேகம் மிக்கவர், துடிப்பு மிக்கவர் என்று அறியப்பட்டவர். அவர் இரண்டு பணிகளை ஒரே நேரத்தில் செய்ய வேண்டிய பொறுப்பில் இருக்கிறார். இப்பகுதியில் திமுகவை வளர்ப்பதோடு வரும் தேர்தல்களில் திமுக வெற்றி பெறச் செய்வது ஒன்று. கூடவே இப்பகுதியில் மக்கள் நலத்திட்டங்களை செய்து மக்களின் நன்மதிப்பை பெறுவது என்று இரண்டு பணிகள் அவருக்கு ஒதுக்கப்பட்டு உள்ளது. இரண்டையும் செந்தில் பாலாஜி சரியாகவே தொடங்கி செய்து வருவதாகத் தோன்றுகிறது.

கோவையில் இன்றைய ஆளும் கட்சியான திமுகவின் முகமாக செந்தில் பாலாஜி அறியப்படுகிறார். ஏற்கனவே மாவட்டம் முழுவதும் மக்கள் சபைக் கூட்டங்களை நடத்தி பல ஆயிரம் மனுக்களைப் பெற்று அதில் சில ஆயிரம் மனுக்களுக்கு தீர்வு கண்டிருக்கிறார். அதன் மூலம் மாவட்டம் முழுவதும் நல்ல அறிமுகமும், நம்பிக்கையும் கிடைத்திருக்கிறது. தொழில் முதலீட்டாளர் மாநாடு, விமான நிலைய விரிவாக்கப் பணிக்கு நிதி ஒதுக்கீடு, முதலமைச்சரின் கோவை வருகை, தொழில்துறை வளர்ச்சி பணிகள் என்று அவர் மூலம் பலவும் நடந்தேறி வருகின்றன.

என்றாலும் சாலை வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளில் கோவை பின்தங்கியே உள்ளது என்றே கூறவேண்டும். கோவையில் திரும்பிய பக்கமெல்லாம் சாலைகள் குண்டும் குழியுமாக காணப்படுகின்றன. பல இடங்களில் பாலம் மற்ற கட்டுமானப் பணிகள் நாட்கணக்கில், வாரக்கணக்கில் இழுத்துக் கொண்டே போகின்றன. மேட்டுப்பாளையம் சாலை மேம்பாலம் கட்டத் தொடங்கி பல ஆண்டுகள் ஆகிறது. பல ஆண்டுகளாக பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. திருச்சி சாலையில் ஓரளவுக்கு பணி நடந்து இருந்தாலும் இன்னும் முற்றுப்பெறவில்லை. அவினாசி சாலை முழுவதும் தூண்களாக நின்று கொண்டிருக்கின்றன. கோவைக்கு பல தேவைகள் இருந்தாலும் சாலை வசதி என்பது மிக முக்கியமான, அவசியமான தேவையாகும். கூடவே உள்ளாட்சித் தேர்தல் வரவுள்ள சூழலில் இதில் கவனம் செலுத்த வேண்டியது



ஆளுங்கட்சியின் மதிப்பை உயர்த்தி, மக்களுடைய நம்பிக்கையைப் பெற உதவும்.

கடந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வந்த பொழுது தமிழக முதல்வராகப் பதவியேற்ற உடன் ஸ்டாலின் தெளிவாக அறிவித்து விட்டார். இங்கே திமுகவுக்கு வாக்களிக்காத மக்களும், அடுத்த முறை வாக்களிக்கும் வகையில் அரசின் செயல்பாடுகள் இருக்கும் என்று கூறியிருந்தார். அதன்படி இப்பகுதிக்கு பல செயல்திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக சாலைகள் மேம்பாட்டிற்கு ரூ. 200 கோடி ஒதுக்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

செந்தில் பாலாஜி இந்தப் பகுதிக்கு அடிக்கடி வருகை தரும் அமைச்சராக இருந்து வருகிறார். அதுவும் கடந்த சில வாரங்களுக்கு முன்பு பெய்த பெருமழையில் கோவையில் தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியது. உடனடியாக வருகை தந்து, நடவடிக்கை எடுத்தது மக்களின் பாராட்டைப் பெற்றது. அதுபோக அரசு தலைமை மருத்துவமனை பாலம், அவிநாசி சாலை மேம்பாலம், கிக்கானி பள்ளி ரயில் பாலம், வடகோவை மேம்பாலம் போன்ற பகுதிகளில் மழைநீர் தேங்காமல் இருக்கும் வகையில், நீண்ட கால நோக்கில் நிரந்தரத் தீர்வு காணும் திட்டமும் உருவாக்கப்படும் என்று கூறியிருக்கிறார்.

கோவை மாவட்டப் பகுதிகளில் பல இடங்களில் வாகன ஓட்டிகள் மற்றும் பயணம் செய்வோரின் முதுகெலும்பை உடைக்கும் வகையில் தான் சாலைகள் தற்போது அமைந்துள்ளன. பல்வேறு கட்டுமானப் பணிகள் முடியாமல் பல மாதங்களாக இழுத்தடித்துக் கொண்டே போகின்றன. மேட்டுப்பாளையத்தில் இருந்து 37 கிலோ மீட்டர் தூரம் என்றால், அங்கிருந்து முதல் 25 கிலோ மீட்டர் வெகு வேகமாக கடந்து வந்து விடலாம். கடைசி பத்து கிலோமீட்டர் தூரத்தைக் கடப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிடும். அதுவும் சுற்றுப் பாதைகள் வழியாக வந்து சேர்வதற்குள் மக்கள் படாதபாடு படுகிறார்கள். இதற்கு இந்த பாலத்தின் கட்டுமானப் பணிகளின் தாமதம் தான் ஒரே காரணம்.

மக்களுக்கு நேரடியாக என்ன நடைமுறை சிக்கல் என்பது தெரியாது. அதனால் தான் அவர்கள் மக்கள் பிரதிநிதிகளை அணுகுகிறார்கள். தற்போதைய முதலமைச்சர் நல்ல முறையில் ஆட்சி செய்வதாக பரவலாக ஒரு எண்ணம் உள்ளது. கோவையில் அமைச்சர் செந்தில் பாலாஜி என்ற செயல்வேகம் அமைச்சர் பொறுப்பில் இருப்பதாக அனைவரும் எண்ணுகிறார்கள். எனவே அதனை நடைமுறையில் செய்து காட்ட வேண்டியது அவரின் கடமையாகும்.

பொதுவாக தீராத சிக்கல்கள் எல்லாம் தீர்வதற்கு, பழனிக்கு பாதயாத்திரை போவதும், திருப்பதிக்கு தீர்த்த யாத்திரை போகும் பழக்கமும் உண்டு. பழனியும், திருப்பதியும், செந்தில் பாலாஜி வடிவில் கோவையைத் தேடி வந்திருக்கிறது. சாலைகள் சீர் பெறும், சாதிப்பார் செந்தில் பாலாஜி என்று அனைவரும் நம்புகிறார்கள். சாதித்துக் காட்டுவார் செந்தில் பாலாஜி என்று நாமும் நம்புவோம்!

**கோவைக்கு பல தேவைகள் இருந்தாலும் சாலை வசதி என்பது மிக முக்கியமான, அவசியமான தேவையாகும். கூடவே உள்ளாட்சித் தேர்தல் வரவுள்ள சூழலில் இதில் கவனம் செலுத்த வேண்டியது ஆளுங்கட்சியின் மதிப்பை உயர்த்தி, மக்களுடைய நம்பிக்கையை பெற உதவும்.**

## புகழ் அஞ்சலி



காக்கும் காங்கல்லார் குலக்கொழுந்து சீர்மிகு செருக்கூரார்
குலம்தழைக்க, விளக்கேற்றியது சென்ற நூற்றாண்டின் வரலாறு.
உந்தையும் தாயும் தவமிருந்து ஈன்றெடுத்தது நவரத்தினங்கள்.
அதில் நீ கடைக்குட்டி-செல்லக்கட்டி-படுசுட்டியும் கூட!

நீ எத்தனை கொடுத்து வைத்தவன், எவ்வளவு அதிர்ஷ்டக்காரன்?
பேர் சொல்லும் பாரம்பரியம், பாசம் பொழியும் தாய்தந்தை,
அவர்தம் இருவழி பெரும்குடும்ப உற்றாரும், உறவினரும்,
தாய்க்கும் தந்தைக்கும் சற்றும் சளைக்காத மாமன்மார் உறவுமுறை,
மல்லிகைப்பூ செண்டாலே சீண்டி உனை தூக்கி தோளில் சுமக்க,
மாமன்மார் நால்வருண்டு: நால்வரும் திருமால் நாமம் கொண்டோர்
உன் பெயரில் திருமுருகன், அந்த திருமால்களுக்கு நீ மருகன்

உன் கதை தொடர்வதெல்லாம், முன் கதையை தொட்டுத்தானே?
இல்லத்தின் இடுகைதன்னில், இறைவன் நம்மைக் காக்க வேண்டி,
தைமகள் வருமுன்னே காப்புக் கட்டுவதும்
பூளை மலர்கள் கொண்டு,
அந்தப் பூளை பூத்த புண்ணிய மண்ணில்
என்றும் நலம் காக்கவல்ல
காங்கல்லார் நால்வர் நட்டிய கற்பகவிருட்சம்தானே-பூ.சா.கோ!
தலைகாக்கும் தர்மத்தின் ஊற்றுக்கண் உயிர் பெற்று வாழும் தலம்
அறத்தை நிறுத்தி செழிப்பை வளர்த்த அறிவுக்கூடம் பூ.சா.கோ.
இணையாத திருமகளும் கலைமகளும்
இணைந்திருக்கும் அறக்கோவில்
எண்ணற்ற பேர்களுக்கு வடிவமைத்து வாழ்வமைத்த
அட்சய பாத்திரம்.

வேளாண்மை கற்ற பின்னர் மேலாண்மை பயில
நீ எண்ணிய காலை,
திருமாலின் பன்னிரண்டாம் பேரோன் உன் மாமன் தாமோதரன்,
அன்று உன்னை கைப்பிடித்து வழிநடத்தி
அறப்பணியில் அமரச்செய்தார்.
என்ன தவம் செய்தாய் நீ? அறத்திற்கு அர்ச்சகராய்
பணியாற்றும் வாய்ப்பிற்கு!

ஐநூறு பிறைக்காலம் அறப்பணி செய்தாய்,
அதன் பலனை நீயும் பெற்றாய்.
அறங்காவலர் அனைவருக்கும் இயங்கும் கரமாகும்
பேரும் பெற்றாய்
மாமன்மார் குடும்பச்சொத்தில் உனக்கு பங்கில்லை
இது வழக்கம்தான்
அவர்தம் அறத்தின் விளைவில், புண்ணியத்தில்
உனக்கும் உண்டு பங்கு

தாமோதரன் விட்ட பணியும், அவர் பின்னோர் இட்ட பணியும்,
தொய்வின்றி தொடர்ந்து செய்தாய், அறங்காவலர்கள்
தலைமையேற்று!
பெற்றோரைப் பிரிந்து கற்கவந்த, எண்ணற்ற மாணவ மணிகளுக்கு,
உறவினனாய்,காப்பாளனாய், அரணாக, அவர்தம் நலம் காத்து,
பெற்றோரின் வயிற்றில் பால் வார்த்த புண்ணியமும்
உன்னைச் சேரும்.

உன் நிர்வாகத்திறனையும், ஆய்ந்து உணரும் அறிவையும்,
இசையின் பால் உனது இசைவினையும், ஈரம் கசியும் நெஞ்சையும்,
முடிவெடுக்கும் துணிவையும், வழி நடத்தும்
தலைமைப் பாங்கையும்,
இல்லையென்பார்க்கு இல்லை என்று இயம்பாத இயல்பையும்
தேனொத்த சொல்லையும், நெறிபிறழாத் தலைமையையும்
செருக்கூரார் குலத்திற்கான ஞானச் செருக்கையும்,
அரசியல்வாதிகளையும் அவர்தம் அதிகாரம் மிக்கோரையும்,
அகலாது அணுகாது அளந்து நின்று தீக்காயும் சாணக்கியத்தையும்,
பழத்தை நழுவ விட்டு பாலில் விழவைக்கும் சாமர்த்தியத்தையும்
கல்லிலும் நார் எடுக்கும் உன் சொல்லாட்சித் திறமையையும்
சல்லடையில் சலித்து நல்லதைப் பொறுக்கி எடுக்கும் பாணியையும்
இன்னும் பலவற்றையும் நானறிவேன் சொல்ல இங்கு இடமில்லை

ஊர்கூடித்தான் தேர் இழுப்பார் இது தெரிந்தது தான்
அந்த ஊரையே கூட்டி வரிசையில் நிறுத்தும் தலைவன் நீ!
ஊரகமோ, நகர்ப்புறமோ, தொழிலகமோ, ஆய்வகமோ
கல்விச்சாலையோ, கட்டுமானமோ உன் கால்படாத இடமேது?
வார்ப்படத்தொழில் வீறுகொண்டு எழுவதற்கு எரிபொருளே தானே நீ?

எனக்கு இன்னும் ஒன்று மட்டும் புரியவேயில்லை அதுதான்
உனது வேழமொத்த வியக்கவைக்கும் நினைவாற்றல்!
ஒருவேளை ஆதிசிவன் மறந்து விட்ட பிரணவ மந்திரத்தை.
அந்த சாமியின் மடியிலமர்ந்து செவியில் ஓதியது நாதனல்லவா?
அந்த சுவாமிநாதன் பெயர்தான் இதற்குக் காரணமோ?
இவையெல்லாம் மனிதன் மறந்திடுவான்
இறைவன் அறிந்திடுவான், வாழ்க உன் புகழ் என்றும்!

-A.V. வரதராஜன்

## விருது பெற்ற சி.ஆர்.ஐ



சி.ஆர்.ஐ பம்ப் நிறுவனம், தேசிய எரிசக்தி பாதுகாப்பிற்கான 2021ம் ஆண்டு விருதினை 7வது முறையாகவும், தொடர்ந்து 5வது முறையும் வென்றுள்ளது. மத்திய மின்துறை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையின் அமைச்சர் ஆர்.கே சிங், விருதை சி.ஆர்.ஐ. குழுமத்தின் இணை நிர்வாக இயக்குனர் செல்வராஜுக்கு வழங்குகிறார்.

## கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



மூலப்பொருட்கள் விலை உயர்வைக் கண்டித்து கோவையில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு, குறு தொழில் நிறுவனங்கள் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் அண்மையில் ஈடுபட்டனர். இதில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தொழில் முனைவோர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# மீண்டும் மஞ்சப்பை!

**மக்கள் துணிப்பை பயன்படுத்தாமல் இருப்பதற்கு சில காரணங்கள் உள்ளன. ஒன்று பிளாஸ்டிக் பை எங்கும் எளிதில் கிடைக்கின்றது. கூடவே கடைக்காரர்கள் பொருள் வாங்கும்போது இலவசமாக தருகிறார்கள். இந்நிலை மாறவேண்டும்.**

**சூழல் தொடர்**

தமிழக அரசு "மீண்டும் மஞ்சப்பை" என்ற விழிப்புணர்வு இயக்கத்தைத் தொடங்கியுள்ளது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். இதனை வழக்கம்போல் தொடங்கப்படும் அரசு திட்டமாக இல்லாமல் மக்கள் இயக்கமாக மாற்றுவதில்தான் இதன் வெற்றி இருக்கிறது.

பிளாஸ்டிக் கேரிபேக் பைகளின் தீமைகள் பற்றிப் பிரசாரம் செய்வது விழிப்புணர்வு ஏற்படுத்துவது என்பதெல்லாம் ஒருபுறம் இருந்தாலும், செயலளவில் அதற்கு மாற்று நடவடிக்கை எடுப்பதற்கு இந்த மீண்டும் மஞ்சப்பை இயக்கம் தான் சரியான எடுத்துக்காட்டு ஆகும். இதனை ஊக்குவித்து நடைமுறைப்படுத்துவது என்பதே சூழலை மீட்டெடுப்பதற்கு உதவியாக அமையும்.

மீண்டும் மஞ்சப்பை திட்டத்தை ஒரு பெரும் மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும். அரசு அலுவலகங்கள் தொடங்கி, தனியார் நிறுவனங்கள், வணிக வளாகங்கள் என்று எல்லா இடங்களிலும் மஞ்சப்பை எனும் துணிப்பை உபயோகத்தை ஊக்குவிக்க வேண்டும். துணிப்பை பயன்படுத்தாமல் இருப்பதற்கு சில காரணங்கள் உள்ளன. ஒன்று பிளாஸ்டிக் பை எங்கும் எளிதில் கிடைக்கின்றது. கூடவே கடைக்காரர்கள் பொருள் வாங்கும்போது இலவசமாக தருகிறார்கள். இந்நிலை மாறவேண்டும். கடைக்காரர்கள் தங்கள் விற்பனையை பெருக்குவதற்காக சுற்றுச்சூழலைக் கெடுப்பதற்கு துணை போகக்கூடாது. வணிக நிறுவனங்கள், அமைப்புகள், வணிகர்கள் இதனைப் புரிந்துகொண்டு துணிப்பையை வழங்க வேண்டும். அதற்கான பணத்தை தேவையான அளவு சேர்த்து வாங்கலாம். நான்கு முறை இப்படி செய்தால் அடுத்த முறை கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் தாங்களே மஞ்சப்பையை கொண்டு வந்து விடுவார்கள்.

இதுபோக சமூக சேவை நிறுவனங்கள், ரோட்டரி கிளப், லயன்ஸ் கிளப் உள்ளிட்ட சமூக சேவை சங்கங்கள் இந்த செய்தியை தொடர் நடவடிக்கையாக மேற்கொள்ள வேண்டும். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் துணிப்பை இலவசமாக வழங்கலாம். பள்ளி கல்லூரி மாணவர்களிடையே மஞ்சப்பை குறித்த விழிப்புணர்வு போட்டிகள் நடத்தி பரிசு வழங்கி ஊக்குவிக்கப்பட வேண்டும்.

மஞ்சப்பை அனைவரும் பயன்படுத்தும் வகையில் விலை குறைவானதாக் கிடைக்குமாறு செய்ய வேண்டும். மகளிர் சுய உதவிக்குழு மூலம் குறைந்த விலையில் இவற்றை உற்பத்தி செய்வதன் மூலம் அவர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும், மக்களும் பயன்பெறுவார்கள்.

மஞ்சப்பை என்பது கேவலம் அல்ல; பிளாஸ்டிக் பை தான் சுற்றுச்சூழலுக்கு எதிரானது, மக்களுக்கும் இயற்கைக்கும் கேடு விளைவிப்பது என்பதை அனைவரும் உணர வேண்டும். பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தப்படும் பொழுது அவை பல நூறு ஆண்டுகள் அழியாமல் இருந்து சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிப்பதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். இவை சாக்கடைகளில் அடைத்துக் கொண்டு ஏற்படுத்தும் கொசுத்தொல்லை தொடங்கி, சென்னை போன்ற இடங்களில் மழை வெள்ள நீர் வடியாமல் தடுப்பது வரை பிளாஸ்டிக் கேரி பேக் உருவாக்கும் சிக்கல்களை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஏதோ போனால் போகிறது என்று பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக மஞ்சப்பையை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். மனமார மண் காக்கும் நோக்கம் கொண்டு, துணிப்பை பயன்படுத்த வேண்டும். கூடவே தேவையற்ற பிளாஸ்டிக்பை உற்பத்தியை அதன் உற்பத்தி இடத்திலேயே தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு பதிலாக நம்முடைய பாரம்பரிய துணிப்பைகளை நாம் பயன்படுத்தத் தொடங்க வேண்டும். அதற்கான அடையாளம் தான் மீண்டும் மஞ்சப்பை.

# SiTarc-QCFI discuss ways for MSMEs' Quality Improvement




*DK Srivastava addressing the MSME stakeholders. From Left: Ma. Sendilkumar, Mohanasundari, G.Rajendiran, KV Karthik and MV Ramesh Babu.*

The Covai Mail

To improve the overall quality of production among MSME Industries in Coimbatore, Scientific & Industrial Testing and Research Center (SiTarc) joined hands with Quality Circle Forum of India (QCFI) - Coimbatore Chapter to organise an MSME Empowerment Program on Thursday. It was held in COINDIA Hall.

Representatives of several MSME organizations and associations attended this event. QCFI's Executive Director DK Srivastava conveyed to them how their innovative strategies aided Parle Products Private Limited to improve the productivity and growth of its major product 'Parle G'.

QCFI had provided consultation and shared knowledge to Parle, and had assured the company that if they follow certain quality principles, in a few years , definitely their cost of production won't rise and they can witness their productivity ascend greatly.

True to what QCFI said, from 1996 to 2011, Parle G's price remained the same, and for more than a decade, the product's productivity rose along with their quality. He shared that magic lies in some of the best business practices that includes Kaizen, TPM, 5s etc., and they are easy to be followed by all organisations. The idea is about value addition, cutting down cost, identifying non-value adding activities, improving effectiveness of equipment, and much more.

Srivastava shared that Coimbatore is among the leading industrial cities, and with the support from QCFI, it can go even higher.

G.Rajendiran, MD, CRI Pumps who was the Chief Guest of the event said that attaining quality and improving it is a continuous process. He said that practicing quality measures have been one of the key reasons for CRI to shine better, and he wanted all MSMEs to thrive by adhering to best business practices and make use of the opportunity presented by QCFI.

QCFI Coimbatore Chapter's Vice Chairman M.Sankarasubramanian was amazed to note that Coimbatore itself already has 1 lakh MSMEs. He shared that QCFI will provide training for 2 hours to interested MSMEs on how to improve their productivity, reduce wastage, improve quality in overall activities, and it will further provide consultations.

Earlier, Ma.Sendilkumar, President, SiTarc welcomed the gathering. Mohanasundari, Chairman, QCFI Coimbatore Chapter highlighted about QCFI's activities. KV Karthik, President, SIEMA and MV. Ramesh Babu, President, CODISSIA offered felicitation.

# ICCIC holds discussion on COVID and Indian Economy

The Covai Mail

COVID-19 has made a huge impact on all businesses, and it is time for the people to update their business practices to withstand changes, expressed K. Pugalendhi, Economist from Chennai.

He shared this while delivering a special lecture on the topic 'Covid pandemic and Indian Economy – A Glance' organized by The Indian Chamber of Commerce and Industry, Coimbatore (ICCIC) at Chamber Hall, recently.

He briefed how some industries like shipping industry thrived during this pandemic. He said the shipping containers' price soared manifold, whereas the manufacturing industry, especially those dependent on steel felt the bite of the rising price, and how due to less availability of chips, automobile industry suffered a decline in their production. He highlighted various scenarios like this.

While the picture of the industries seemed dull on the one side, he said every gloomy moment like pandemic brings into the world new confidence. By pointing at the pace at which our country developed a vaccine, he expressed confidence that we can find great opportunities post this struggle. He said that during every great obstacle there comes a new normal, new thinking, new innovation and new confidence.

He said superpower like America wants India to be the new workshop of the world. Drawing attention to how Apple Inc., has moved its plant to India, and started making products here, he said good days are around the corner for the country. He shared that India and Taiwan are speaking about making chips, and maybe some big companies can set their plant here soon.

He then went on to express ideas on how long will certain industries take time to come back to normal, and how industry 4.0 will revolutionize the sector as whole. Later, the attendants of this lecture raised their questions to the chief guest, and received clarification.





*K. Pugalendhi addressing the members of ICCIC. From Left: Dorairaj, Honorary Secretary, C.Balasubramanian President, and Natarajan, Honorary Secretary, ICCIC.*

## Avinashilingam appoints new VC



The Covai Mail

Avinashilingam Institute for Home Science & Higher Education for Women has appointed V. Bharathi Harishankar as its new Vice Chancellor.

Bharathi is a Professor of English and Founding Head of the Department of Women's Studies, University of Madras and a Fellow of the Royal Society of Arts, London, UK.

She was instrumental in setting up a Gender Lab, the first of its kind in the country, to offer online workshops on gender sensitization, in collaboration with Sutherland Global Services. She has designed a Soft Skills course on Gender Sensitization and Workplace Readiness.

## A Book Fair where books are free!

The Covai Mail

Delhi based organization Kitab Lovers is organizing a very different kind of book fair in Coimbatore where books can be filled in boxes for free and be taken home, but they only have to pay for the boxes.

The boxes come in 3 different sizes with respective prices. Buyers can purchase boxes according to their needs, and fill them with books. This kind of book fair is new to Coimbatore, and since it is Christmas season, this fair has become a nice platform for people to buy and gift loads of books to their bibliophile friends.

The fair features more than 2 lakh books on thousands of topics by thousands of authors, a press release said. It is an effort to bring youth again in the world of reading.

The fair goes on till Sunday at Meenakshi Hall , Avinashi Road , PN Palayam.

## SNMV depicts a classic Christmas moment!

The Covai Mail

Ahead of Christmas, the Department of English, Shri Nehru Maha Vidyalaya College of Arts and Science made an effort to portray the scene of the Infant Jesus in the Manger.

The Department titled this event as Tableaux Vivant, which means Living Picture, and it took place on Thursday at the college premises. It was aimed at connecting the biblical events and literature to the students.

B. Subramani, Principal of the College presided over the program. V. Sabariraja, Head of the department along with faculty members convened the event. Students of the department enthusiastically participated and made 'Tableaux Vivant' picture perfect!

## Amway bets big on India

The Covai Mail


The world's number one direct selling company, Amway, has continued its growth trajectory in India powered by its nutrition and wellness portfolio along with its thriving community of entrepreneurs.

The company is now set for the next-level transformation, further building on the growth strategy charted out by global CEO Milind Pant. Aligned with the focus on unleashing entrepreneurship and creating long term value in the health and wellness category, Amway has earmarked a global investment of over USD 300 million through 2024 to boost innovation and science, digital technology, and entrepreneurship.

Among the 100 plus markets that Amway operates in, India is one of the key growth markets. Further, India is among the top three preferred investment destinations for Amway with a focus on digital, manufacturing automation, innovation, and nutrition segment.

Known for its quality health and wellness products and unparalleled business opportunities, Amway has established a strong foothold in India over the last two decades of its operations in the market.

# SRCAS student selected for Delhi Republic Day parade!



*From Left: S.Prahadeeswaran, C. Samuel Chellaiah, S.Naveen Sankar, D. Lakshminarayanaswamy, and B.L.Shivakumar.*

The Covai Mail

S.Naveen Sankar, a National Service Scheme (NSS) volunteer and second year student from Sri Ramakrishna College of Arts and Science has secured place in the final list of volunteers selected for the Republic Day parade to be held in New Delhi in 2022.

He excelled in the pre-Republic Day (RD) parade held in Bangalore recently to secure a place in the final list. It may be noted that NSS volunteers from Sri Ramakrishna College of Arts and Science are taking part in the RD Parade, New Delhi for the past seven consecutive years.

Lakshminarayanaswamy, Managing Trustee, SNR Sons Charitable Trust, C.Samuel Chellaiah, NSS Regional Director of Tamilnadu, B.L.Shivakumar, Principal and S.Prahadeeswaran NSS Programme Officer of the college congratulated the student for his achievements.

# Dr.NGP IT holds Aids Awareness Program




*The students along with the faculty during the rally.*

The Covai Mail

The NSS Units of Dr.NGP Institute of Technology organized a campaign to promote the awareness of AIDS, among the public in Coimbatore.

This program was held in association with Youth Red Cross and Red Ribbon Club, Coimbatore, as a part of the 'Azadi Ka Amrit Mahotsav' celebrations by Ministry of Housing and Urban Affairs.

The campaign was flagged off by the college Principal S.U.Prabha along with Professors C. Chinnaraj, M. Senthil Rajan, P. Chandrasekar, S. Dinesh Kumar and the students. The rally started from SITRA Junction and concluded at the college entrance.

The participants of the rally used handmade posters, slogans and flex prints to display aid awareness messages among the public.

# Never Ever Fear Failure

## - Vikram Mohan



The Covai Mail

Failures can teach great lessons for every individual, and make them strong. "Never ever fear failure", expressed Vikram Mohan, Managing Director, Pricol Limited, Coimbatore at the CXO Connects event organized by D.J. Academy for Managerial Excellence.

CXO Connects is an Interaction Initiative with corporate leaders, and the latest edition was held Dec.18. Vikram Mohan spoke on the topic 'An effective planning tool to help achieve Goals'.

Vikram explained the gathering about the 'Rule of 3' that everyone should follow to sustain in their business territory. He also explained the 6W1H (Who, What, Whom, When, Where, Why and How), an effective planning tool for any business, and also emphasized the importance of 'Plan B' to have an embarking journey in the business.

The session was followed by Q&A session. Students, Faculty members of DJAME and other Institution Faculties and students took part in this interaction initiative.

# 1st Edition of KPR Chess Tournament

The Covai Mail

KPR Educational Institutions, Coimbatore conducted the 1st KPR State Level Chess Tournament recently.

The competitions were held under the age groups -Under 9, Under 12, Under 15 and Under 18. 310 players from Coimbatore, Tiruppur, Erode, Madurai, Ranipet, Dharmapuri, Cuddalore, Nilgiris, Tenkasi and many other districts participated.

The top ten winners in each age group in boys category and the first five winners in girls category were awarded trophies and certificates.

M. Akila, Principal, KPR Institute of Engineering and Technology, Vijayaragavan, Joint Secretary, Tamil Nadu Chess Association, Inthikab Agam, Vice President, Dhanasekaran, Secretary, Coimbatore District Chess Association and Sathieesh, Chief International Referee presented the trophies to the winners.



*A vast number of players engaged at the tournament*

# KASC students bag huge placement offers!




*Four students of Kongunadu Arts and Science College (KASC) Revathy, Anisha, Sneha and Shyam received placement offers with a total CTC of Rs. 9 lac.per annum for the post of Business Development Associate from Intellipaat. Secretary & Director of the College, C.A.Vasuki congratulated the students.*

# KCT crowned the Top Innovative Research Institution!

The Covai Mail

At the 8th CII Industrial Innovation Awards 2021, Kumaraguru College of Technology was announced the winner of the Top Innovative Research Institutions 2021 category.

Known for frequently coming up with unique innovative concepts, KCT introduced 4 of its products - eco-friendly sanitary napkins from natural fibre; low Weight Modified Jacquard for Handloom Weavers; autonomous Multifunctional Agricultural Robotic Platform and a fully automated AI patient monitoring Robot.

After defending their projects and their technicalities, this National honor has been bestowed upon the institution.

B.K.Krishnaraj Vanavarayar, Chairman, M.Balasubramaniam, Correspondent and Shankar Vanavarayar, Joint Correspondent, Kumaraguru Institutions appreciated the KCT team comprising educators, faculty members from R&D Team, IPR cell, IIC, Department IIC coordinators, Forge, RIG and KCIRI.

To ADVERTISE IN THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL
**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

RNI Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from #2-F, Trishank Apartment, G.K.D Nagar, Nethaji Road, Papanaikenpalayam, Coimbatore - 641 037 and Printed at Newsmen Associates Limited, #1, Sidco Industrial Estate, Kurichi, Coimbatore - 641 021. Editor: C.Srinivasan